தமிழ்

# ஆசிரியர் கையேடு

மூன்றாம் வகுப்பு

## Teacher’s Resource Book

**STANDARD III**
**TAMIL**

**MAHATMA GANDHI INSTITUTE**
**In collaboration with**
**MINISTRY OF EDUCATION AND HUMAN RESOURCES, TERTIARY EDUCATION AND SCIENTIFIC RESEARCH**
**Republic of Mauritius - 2016**

**PRIMARY CURRICULUM PANEL TEAM**

**TAMIL**

| | | |
|---|---|---|
| **Dr (Mrs) U.D.ALLAGHERY** | - | Lecturer |
| **(Coordinator)** | | Department of Tamil Studies |
| | | Mahatma Gandhi Institute |
| **Mrs.R.CHENGANNA** | - | Senior Supervisor |
| | | Ministry of Education and Human Resources |
| **Mrs.R. PADICHY** | - | Educator |
| | | Ministry of Education and Human Resources |
| **Mr.P.CHEENARAMEN** | - | Educator |
| | | Ministry of Education and Human Resources |

**ACKNOWLEDGEMENT AND COORDINATION**

**MAHATMA GANDHI INSTITUTE**

**MAURITIUS INSTITUTE OF EDUCATION**

**PRODUCTION**

Word Processing: **Mr Poulaven Cheenaramen**

# அறிமுகவுரை

இப்புதிய ஆசிரியர் கையேடு தொடக்கநிலைப் புதிய கல்வி மேம்பாட்டு ஏற்பாட்டின் அடிப்படையில் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு உரியது.

இக்கையேட்டில் பத்து தொகுதிகள் உள்ளன. அத்தொகுதிகளில் நான்கு திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் குறிக்கப் பெறும் வாய்மொழிப் பயிற்சி, செயல்முறை, ஆசிரியர் குறிப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் நடத்தல் வேண்டும்.

இப்புதிய ஆசிரியர் கையேடு கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதால் சில திருத்தங்களும் மாற்றங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. மாணவர்களிடம் மொழி வளம் வளர்த்துக் கொள்வதற்குச் சில புதிய வகை பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே ஆசிரியர் சில புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு கொள்ள வேண்டும்.

இப்புதிய ஆசிரியர் கையேடு உருவாக்குவதில் ஒத்துழைத்த தமிழ்ப் பாடநூல் குழுவினருக்கும் ஆசிரியர் பெருமக்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றி.

*முனைவர் உமா அழகிரி*

*ஒருங்கிணைப்பாளர்*

## கற்றலின் விளைவுகள்

- பள்ளிச் சூழல், குடும்பம், வீட்டு விலங்குகள், இயற்கை, நல்லொழுக்கம், பண்பாட்டுக் கூறு, கடற்கரை, விளையாட்டு, புலவர் முதலிய தலைப்புகளின் செய்திகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- வாய்மொழிப் பயிற்சியில் ஈடுபடுதல்.
- தமிழில் உள்ள எல்லா எழுத்துக்களையும் அறிந்து கொள்ளுதல்.
- சொல், தொடர், பகுதி முதலியவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்.
- படங்களின் செய்திகளை எடுத்துரைத்தல்.
- உரையாடல், கதை, பாடல் ஆகியவற்றைக் கேட்டு ரசித்தல்.
- உரக்கப் படித்தல்.
- பாடல்களைச் செய்கையுடன் பாடி மகிழ்தல்.
- சொற்களஞ்சியத்தை வளர்த்தல்.
- இணைத்தல், ஒழுங்காக எழுதுதல், சரியான சொல்லை எழுதுதல், சிறு தொடர்களை எழுதுதல், சொல்வதெழுதுதல் முதலிய பயிற்சிகளைச் செய்வதறிதல்.
- வேற்றுமை, ஆண்பால் - பெண்பால், ஒருமை - பன்மை, எதிர்ச்சொல், வினைச்சொல் முதலியவற்றைப் பயன்படுத்துதல்.

# உள்ளடக்கம்


| தொகுதி | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஒரு பள்ளி நாள் | 1 - 6 |
| 2. | குடும்பம் | 7 - 11 |
| 3. | வீட்டு விலங்குகள் | 12 - 15 |
| 4. | மாமரம் | 16 - 19 |
| 5. | பூசை நாள் | 20 - 23 |
| 6. | நல்ல செயல் | 24 - 27 |
| 7. | கடற்கரை | 28 - 32 |
| 8. | ஔவையார் | 33 - 36 |
| 9. | விளையாட்டு | 37 - 40 |
| 10. | அழகனும் தாத்தாவும் | 41 - 44 |

# தொகுதி: ஒன்று

## பகுதி: ஒரு பள்ளி நாள்

### பாட நோக்கங்கள்:

- மாணவன்/ மாணவி பள்ளி நாளை எவ்வாறு கழிக்கிறான்/கழிக்கிறாள் என்று அறியச் செய்தல்.
- மாணவர்களுக்குத் தேவைப்படும் நல்லொழுக்கங்களைப் பற்றி அறிவு வளர்த்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- சொற்களில் ஆகார ஒலியை வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- பள்ளி படம்.
- வகுப்பறை படம்.
- மாணவன் பள்ளிக்குச் செல்லும் படம்.
- பள்ளி ஆடை, உணவுப்பை முதலிய உண்மையான பொருள்கள்.
- பள்ளி தொடர்பான செய்திகள் கொண்ட பெரிய அட்டை (மாதிரிக் குறிப்பைக் காண்க)
- ஓய்வு நேரத்தில் செய்கின்ற செயல்களின் படங்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

ஆசிரியர் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும். மேலும் படங்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி வளர்த்துக் கொள்ளலாம்.

## பாட அறிமுகம்:

- மாணவன் ஒரு பள்ளி நாளில் என்ன என்ன செய்கிறான் என்று அறிமுகம் செய்தல்.

  (முதலில் வினாக்கள் மூலமாக முன்னறிவைச் சோதித்தல்)

  **(எ-டு)　உன் பள்ளி பெயர் என்ன?**

  **இன்று/இன்றைக்கு என்ன கிழமை?**

  **நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?**

  போன்ற எளிமையான சிறு வினாக்களைக் கேட்டு முன்னறிவைச் சோதித்தல்.

- படங்களின் மூலமாகப் பாடத்தில் வந்துள்ள செய்திகளை அறிமுகம் செய்தல்.

  **(எ-டு)　நான் பள்ளிக்குப் போகிறேன்.**

  **தலைமை ஆசிரியர் பள்ளி மணி அடிக்கிறார்.**

  **ஆசிரியருக்கு வணக்கம் சொல்கிறேன்.**

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பையும் பகுதியில் வரும் சொற்களையும் தொடர்களையும் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி மாணவர்களை வாசிக்க உதவி செய்தல். (மாணவர்கள் வாசிக்கும்போது ஆசிரியர் உச்சரிப்பைக் கவனித்தல்.)

## புதிய சொற்களை விளக்குதல்:

- பாடத் தலைப்பை விளக்குதல்.

- *மூன்றாம், பிறகு, ஓய்வு நேரம், மாலையில், திரும்பு* ஆகியவற்றைப் படங்கள் மூலமாகவும் வாய்மொழிப் பயிற்சி மூலமாகவும் செய்கை மூலமாகவும் விளக்குதல்.

  **(எ-டு)** **உன் முதுகில் என்ன இருக்கிறது?**
  **நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?**
  **ஓய்வு நேரத்தில் என்ன செய்கிறாய்?**
  **ஓய்வு நேரத்தில் நான் சாப்பிடுகிறேன்.**
  **ஓய்வு நேரத்தில் நான் விளையாடுகிறேன்.**
  **ஓய்வு நேரத்தில் நான் பலகாரம் வாங்குகிறேன்.**

- இப்புதிய சொற்களை வேறு பல சொற்றொடர்களில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று விளக்கிக் காட்டுதல்.

## செயல் முறை:

- மாணவர்கள் 'மணி அடி', 'வணக்கம் சொல்', 'ரொட்டி சாப்பிடு', ‘பாடம் படி’ போன்றவை செய்கை மூலமாகக் கற்பித்தல்.

## இலக்கணம்:

- 'கிறேன்', 'கிறாய்' ஆகியவை வினைச்சொற்களோடு இணைந்து வருவதைச் சொல்லிக் கொடுத்தல்.
  (அட்டைகளில் பட்டியல் தயாரித்துக் கற்பித்தல்.)

## பயிற்சி:

- பாடநூலில் வந்துள்ள எழுத்துப் பயிற்சிகள் மாணவர்கள் தங்கள் பயிற்சி நூலில் எழுதும்படி செய்தல் வேண்டும்.

- பகுதியைப் பார்த்துக் கோடுள்ள இடங்களை நிரப்புதல். (இப்பயிற்சி வாய்மொழி மூலமாகவும் நடத்தல் வேண்டும்)
- கோடிட்ட இடங்களில் 'இல்' சேர்த்து வாசி.
- கோடிட்ட இடங்களில் ‘கிறேன்’/‘க்கிறேன்’ எழுது.
- கோடிட்ட இடங்களில் 'க்கு' சேர்த்து எழுது
- கோடிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுது.

## வாசித்தல்:

- 'ஆ' ஒலி மீது அழுத்தம் போட்டு வாசிப்பு நடத்துதல்.
- 'உம்' என்னும் விகுதி மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.
- சொற்களையும் தொடர்களையும் வாசி.

## தெரிந்துகொள்:

- காலைக்கடன், 'இல்' வேற்றுமை உருபு, 'கிறாய்' ஆகிய பகுதிகளை வாசித்த பிறகு மாணவர்களையும் வாசிக்கச் செய்தல்.

## குறிப்பு:

- ஒவ்வொரு மாணவனும்/ மாணவியும் தன் பெயரும், படிக்கும் வகுப்பும், பள்ளிப் பெயரும் வகுப்புக்கு முன் வந்து சொல்லச் செய்தல். (பாடத்தின் இறுதி பாகமாக அமையட்டும்.)
- 'கவனி', 'தெரிந்துகொள்' ஆகிய பகுதிகளையும் வாசித்த பிறகு மாணவர்களையும் வாசிக்கச் செய்தல்.

## மதிப்பீடு:

வாய்மொழிப் பயிற்சி, வாசித்தல், இலக்கணக் கூறுகள், வினைச்சொல் பயிற்சி ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

முதலில் ஆசிரியர் இவ்வகைப் பயிற்சியை வாய்மொழிப் பயிற்சி மூலம் செய்த பிறகு மாணவர்களை எழுதச் செய்யலாம்.



## பாடல்: பள்ளிக்குப் போவேன்

### பாட நோக்கங்கள்:

- கல்வியிலும் விளையாட்டிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தல்.
- சிறுவர்களிடம் உடல் நலமும் உள நலமும் வளர்த்தல்.

### வாய்மொழிப் பயிற்சி:

- முதலில் பாடலில் வரும் விளக்கப்படத்தை வைத்து உரையாடல் நடத்துதல்.
- பாடலில் வரும் சொற்களை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

### செயல் முறை:

- பாடல் செய்கையுடன் பாடுதல்.

**குறிப்பு: ஆசிரியர் பாடலைப் பாடச் செய்தல்.**

## தொகுதி: இரண்டு

## பகுதி: குடும்பம்

### பாட நோக்கங்கள்:

- குடும்பத்தைப் பற்றிப் பொது அறிவு வளர்த்தல்.
- குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் அறியச் செய்தல்.
- குடும்பத்தில் ஒவ்வொருவருடைய செயலைக் குறித்து அறியச் செய்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- இகர ஒலியைச் சொற்களில் வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- குடும்பப் படம்.
- பாடத்துக்கு ஏற்ற துணைக்கருவிகள்.
- கணினி, பழம், ரொட்டி முதலிய உண்மையான பொருள்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

### பாட அறிமுகம்:

- முதலில் படத்தைக் கொண்டு குடும்பம் என்ற சொல்லை விளக்குதல். குடும்பத்தைப் பற்றிப் பொதுவாகப் பேசுதல்.
- குறிப்பிட்ட ஒரு மாணவனுடைய குடும்பத்தைப் பற்றிக் கேட்டறிதல்.

(எ-டு) **உனக்கு அண்ணன் இருக்கிறாரா?**

**உன் அம்மா வேலைக்குப் போகிறாரா?**

**உன் அப்பா என்ன வேலை செய்கிறார்?**

**உன் குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள்?**

போன்ற எளிமையான வினாக்களைக் கேட்டு முன்னறிவைச் சோதித்தல்.

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பைக் கரும்பலகையில் எழுதி விளக்குதல்.
- பகுதியில் வரும் புதிய சொற்கள் சிலவற்றைக் கரும்பலகையில் எழுதி வாசிக்கச் செய்தல். பிறகு விளக்கம் தருதல்.
- சொற்றொடர்களையும் வாசிக்கச் செய்தல்.
- மாணவர்கள் வாசிக்கும்போது ஆசிரியர் உச்சரிப்பைக் கவனித்தல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *குடும்பம், வயது, பேர், காவலர், வீட்டு வேலை, நன்றாக, கதை, படிப்பு அறை, எல்லாரும், இன்பமாக.*

  இவற்றைப் படங்கள் மூலமாகவும் சொற்றொடர் மூலமாகவும் விளக்குதல்.
- படங்கள் மூலமாகவும் செய்கை மூலமாகவும் வினாக்கள் மூலமாகவும் தொடர்கள் மூலமாகவும் இவற்றை விளக்குதல்.

  **(எ-டு)** **பேர்**

  - ***ஆசிரியர் மாணவன்/மாணவியைச் சுட்டிக்காட்டி, இவன்/இவள் குடும்பத்தில் _______________ பேர் இருக்கிறார்கள்.***
  - ***வகுப்பறையில் ____________________ பேர் இருக்கிறார்கள்.***
  - ***திடலில் _________________ பேர் விளையாடுகிறார்கள்.***

  வயது

  - ***உனக்கு வயது எட்டு.***

- ***குமரனுக்கு வயது ஏழு.***
- ***அக்காவுக்கு வயது இருபது.***
-

**கதை**

- ***ஆசிரியர் ஓரிரு கதை நூல்களைக் காட்டி ஒரு கதை சொல்லலாம்.***

**வீட்டு வேலை**

- ***ஆசிரியர் சில வீட்டு வேலைகளை எடுத்துச் சொல்லுதல்.***

இவ்வாறு பகுதியில் வரும் புதிய சொற்களை விளக்குதல்.

'ஆக' என்னும் வினையடையைச் சுட்டிக்காட்டுதல்.

***(எ-டு)     இன்பமாக இரு, வரிசையாக நில், நன்றாகச் சாப்பிடு.***

## செயல் முறை:

- வீட்டு வேலை செய்தல், கதை சொல்லுதல், போன்றவை செய்கை மூலமாகக் கற்பித்தல்.
- **சிறுவிளையாட்டு:-**
  - பகுதியில் வரும் சில சொற்களைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதி, மாணவர்கள் அவற்றை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர்கள் அமைக்கச் செய்தல்.

## இலக்கணம்:

- 'கிறான்', 'கிறாள்', 'கிறார்' ஆகியவை வினைச்சொற்களோடு வருவதைச் சொல்லிக்கொடுத்தல்.
- 'இல்' என்னும் வேற்றுமை உருபைக் கற்பித்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்: ஆசிரியர் இன்னும் வேறு பயிற்சிகளைக் கொடுக்கலாம். அவை பின்வருமாறு
- 'இவன்', 'இவள்', 'இவர்' என்னும் சொற்களைக் கொண்டு எழுதும் பயிற்சி.
- 'இல்' என்னும் வேற்றுமை உருபு சேர்த்து எழுதுதல்.
- கட்டங்களில் பொருத்தமான எழுத்தை எழுது.
- 'கிறேன்', 'கிறாய்' ஆகியவை வினைச்சொற்களில் இணைத்து எழுதுதல்.
- பெண்பாலில் எழுதுதல்.

## வாசித்தல்:

- 'இ' ஒலி மீது அழுத்தம் போட்டு வாசிப்பு நடத்துதல்.
- 'ட்டு' ஒலியின் மீது அழுத்தம் போட்டு சொற்களை வாசிக்கச் செய்தல்.
- சொற்களையும் தொடர்களையும் வாசிக்கச் செய்தல்.

## தெரிந்துகொள்:

- 'கிறான்'/'கிறாள்'/'கிறார்', ஆண்பால்-பெண்பால் இவ்விரண்டு பட்டியல்களில் வரும் சொற்களை அட்டைகளில் எழுதிப் பல்வேறு விளையாட்டுக்களின் மூலமாக மாணவர்களைப் படிக்க வைத்தல்.

## நிகழ்வு:

- ஆசிரியர் படங்களைக் காட்டி 'புத்தாண்டு' என்னும் நிகழ்வை மாணவர்களுக்குச் சொல்லுதல்.

- நட்பு, மதிப்பு, பண்பாடு வளர்த்தல் என்று ஆசிரியர் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.
- மாணவர்கள் வகுப்புக்கு முன்னால் நின்று நிகழ்வைச் சொல்ல வைக்கலாம்.

**மதிப்பீடு:**

- வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்
- வாசித்தல்
- பயிற்சி
- பகுதியில் காணும் ஐந்து சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சொல்வதெழுதுதல் நடத்துதல்.

## தொகுதி: மூன்று

## பகுதி: வீட்டு விலங்குகள்

### பாட நோக்கங்கள்:

- நம் நாட்டிலுள்ள சில வீட்டு விலங்குகளைப் பற்றிப் பொது அறிவு வளர்த்தல்.
- மாணவர்கள் விலங்குகள் மீது கொண்டுள்ள அன்பு உணர்வை ஆசிரியர் இப்பாடம் மூலம் வளர்த்தல்.
- விலங்குகளின் தன்மைகளை அறியச் செய்தல்.
- வாசித்தல், புரிந்துணர்தல், எழுதுதல் ஆகிய திறன்களை வளர்த்தல்.
- ஈகார ஒலியைச் சொற்களில் வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- கொட்டகை படம்.
- விலங்குகளின் படங்கள்.
- பூனை பால் குடிக்கும் படம்.
- ஆடு தழை தின்னும் படம்.
- கூடு படம்.
- காரட்டு, புல் முதலிய உண்மையான பொருள்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

## பாட அறிமுகம்:

- மாணவர்களுக்குத் தெரிந்த சில விலங்குகளின் பெயர்களைச் சொல்ல வைத்தல்.
- ஒரு விலங்கின் பொதுத் தன்மைகளைக் குறித்துக் கேட்டறிதல்.
- சிறு எளிமையான வினாக்கள் மூலமாக மாணவர்களின் முன்னறிவைச் சோதித்தல்.

  **(எ-டு)** **பூனை என்ன நிறம்?**

- படங்களின் மூலமாகப் பாடத்தில் வந்துள்ள செய்திகளை அறிமுகம் செய்தல்.

  **(எ-டு)** **விலங்குகள் கொட்டகையில் வாழ்கின்றன.**
  **நாய் 'லொள் லொள்' என்று குரைக்கிறது.**
  **முயல்கள் கூட்டில் வாழ்கின்றன.**

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பைக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி விளக்குதல்.
- கரும்பலகையில்/வெண்பலகையில் புதிய சொற்களை எழுதி, சரியான உச்சரிப்புடன் படிக்கச் செய்து விளக்குதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *வால், ஆட்டு, 'லொள் லொள்' என்று குரை, கூடு, கொட்டகை, பின்னால், தழை, வாழ்.*

இவற்றைப் படங்கள் மூலமாகவும் வினாக்கள் மூலமாகவும் செய்கை மூலமாகவும் விளக்குதல். (சில சொற்களைப் பிரித்து எழுதி விளக்குதல்).

(எ-டு) **உன் ஊர் பெயர் என்ன?**

**உன் வீட்டுக்குப் பின்னால் என்ன இருக்கிறது?**

**முயல் என்ன தின்னும்?**

புதிய சொற்களைச் சிறு சிறு சொற்றொடர்களில் அமைத்து விளக்குதல்.

## செயல் முறை:

- குடி, தலை ஆட்டு போன்றவை செய்கை மூலமாக நடித்துக் காட்டுதல்.
- மாணவர்களையும் செயல்களைச் செய்ய வைத்தல்.
- ஒருமை – பன்மை:-

  ஆசிரியர் அட்டைகளில் சில பன்மை சொற்களை எழுதி மேசை மேல் வைத்தல். பிறகு ஒரு சொல்லுக்குரிய பன்மையை அட்டைகளுள் தேடக் கூறுதல்.

## இலக்கணம்:

- 'கிறது' என்பது வினைச்சொற்களோடு வருவதைச் சொல்லிக்கொடுத்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்: வினாக்களைப் படித்து, விடைகளைப் பகுதியில் பார்த்துக் கோடுகளில் எழுதுதல்.
- ஒருமை-பன்மை பயிற்சி.
- 'ஓர்' சேர்த்து எழுது.

- 'சரி' அல்லது 'தவறு' எழுதும் பயிற்சி.
- கோடிட்ட இடங்களில் 'இது' நிரப்பும் பயிற்சி, பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்தும் பயிற்சி.
- கீழ்க்கணும் சொற்களைத் தேர்ந்தெடுத்துச் சரியான வரிசையில் எழுது.

## வாசித்தல்:

- 'ஈ' ஒலி மீது அழுத்தம் போட்டு வாசிப்பு நடத்துதல்.
- 'வாசி' என்ற பகுதியின் மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.

## தெரிந்துகொள்:

இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## பாடல்: 'கன்றுக்குட்டி'

- பாடலில் வரும் விளக்கப் படத்தைக் கொண்டு உரையாடல் நடத்துதல்.
- பாடலில் வரும் சொற்களை நன்கு உச்சரித்துப் பாடுதல், மாணவர்களைப் பாட வைத்தல்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி
- வாசித்தல்
- ஒரே 'இனம்' இல்லாத சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களில் எழுது.
- பெண்பாலில் எழுது.

# தொகுதி: நான்கு

## பகுதி: மாமரம்

### பாட நோக்கங்கள்:

- மாமரத்தைப் பற்றிப் பொது அறிவை வளர்த்தல்.
- மாமரத்தின் நன்மைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- மாமரத்தின் பல்வேறு பகுதிகளை அறியச் செய்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- உகர ஒலியைச் சொற்களில் வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- மாமரத்தின் படம்.
- மாம்பழம், மாங்காய் படம்.
- பறவை பழத்தைத் தின்னும் படம்.
- மாமரம், மாவிலை, மாவிலைத் தோரணம், ஊறுகாய் முதலிய உண்மையான பொருள்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

### பாட அறிமுகம்:

- மாமரத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றிப் படங்களின் மூலமாக அறிமுகப்படுத்துதல்.
- மாணவர்களுக்குத் தெரிந்த வேறு சில மரங்களின் பெயர்களைச் சொல்ல வைத்தல்.

- சில எளிமையான வாய்மொழி மூலமாக மாணவர்களின் முன்னறிவைச் சோதித்தல்.

  (எ-டு) **உன் பள்ளியில்/வீட்டில் என்ன மரம் இருக்கிறது?**

  **........................ மரத்தில் என்ன காய்க்கும்?**

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பை விளக்குதல்.
- சொற்களைத் தனித்தனியாக வாசித்தல்.
- சொற்றொடர்களை வாசிக்கச் செய்தல்.
- சொற்றொடரில் உள்ள சொற்களையும் கற்பித்தல் வேண்டும்.
- கற்பிக்கும்போது உச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *கிளை, மாங்காய், கொத்துக் கொத்தாய், காய், பறி, ஊறுகாய், விழா நாள், மாவிலைத் தோரணம், கட்டு, நிழல், தா, கொத்தித் தின்னும்.* இவற்றைப் படங்கள் மூலமாகவும் சொற்றொடர் மூலமாகவும் விளக்குதல்.

  (எ-டு) **வளர்கிறது**

  - **ஆசிரியர் சிறு பெட்டியில் ஒரு விதையை மண்ணில் விதைத்து, அது வளரும்போது மாணவர்களிடம் சுட்டிக்காட்டுதல்.**

  **நிழல்**

  - **ஆசிரியர் மாணவர்களை மரத்தடியில் அழைத்துக் கொண்டு நிழலைச் சுட்டிக்காட்டுதல்.**

- **'புளிக்கும்', 'இனிக்கும்' ஆகிய சொற்களை விளக்கும்பொழுது வேறு சுவைகளையும் சேர்த்து விளக்குதல்.**

- **'ஊறுகாய்' வகுப்பறைக்குக் கொண்டு வந்து விளக்குதல்.**

## செயல் முறை:

- மாணவர்களுக்குச் சில சொற்களை நன்கு விளங்கும்படி செயலில் ஈடுபடலாம்.
- தேங்காய், மாங்காய், லெட்சி, திராட்சை **கொத்துக் கொத்தாய்க்** காய்க்கும் என்று விளக்கி வரையச் செய்யலாம்.
- மாவிலைகளைக் கொண்டு **தோரணம்** கட்டச் செய்தல்.

## இலக்கணம்:

- 'கிறோம்' வினைகளோடு இணைந்து வருவதைச் சொல்லிக் கொடுத்தல்.
- 'உம்' என்ற விகுதியைச் சொல்லிக் கொடுத்தல்.
- 'கு' வேற்றுமை உருபைச் சொல்லிக் கொடுத்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்: வினாக்களை வாசித்துப் பகுதியில் உள்ள சரியான சொல்லைக் கண்டுபிடித்து எழுதுதல்.
- 'ஆனால்' என்ற சொல்லைக் கோடுள்ள இடங்களில் எழுதி வாசிக்கச் செய்தல்.
- கோடுள்ள இடங்களில் என்ன, எத்தனை, யார், எங்கே எழுதும் பயிற்சி.
- சொற்றொடர்களில் சொற்களை ஒழுங்காக எழுதும் பயிற்சி.
- வளைக்கோட்டில் உள்ள சொல்லோடு 'கு' சேர்த்து எழுது.
- பொருத்தமான படத்தின் கீழ் சொற்றொடர்களை எழுது.

## வாசித்தல்:

- 'உ' ஒலி மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.
- 'வாசி', 'கவனி', ஆகிய பகுதிகளை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## தெரிந்துகொள்:

இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## நிகழ்வு:

- ஆசிரியர் படங்களைக் காட்டி 'மாமரம்' என்னும் நிகழ்வை மாணவர்களுக்குச் சொல்லுதல்.
- மாமரத்தைப் பற்றிப் பொது அறிவை வளர்த்தல் என்று ஆசிரியர் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். (Reinforcement)
- மாணவர்கள் வகுப்புக்கு முன்னால் நின்று நிகழ்வைச் சொல்ல வைக்கலாம்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி
- வாசித்தல்
- சொற்களைக் கொண்டு சொல்வதெழுதுதல் நடத்துதல்.
    - அது மரம்.
    - என் நாய்.
    - சிறிய பறவை.
    - ஒரு மாணவன்.
    - அழகான வீடு.
- சொற்களை ஒழுங்காக இணைத்து எழுதுதல்.

# தொகுதி: ஐந்து

## பகுதி: பூசை நாள்

### பாட நோக்கங்கள்:

- பூசை நாளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பூசைக்குரிய பொருள்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றைக் கற்பித்தல்.
- கற்றல் அடிப்படைத் திறன்களை வளர்த்தல்.
- ஊகார ஒலியைச் சொற்களில் வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- பூசை அறை படம்.
- பூசைப் பொருள்களின் படங்கள்.
- அர்ச்சகர் படம்.

### வாய்மொழிப் பயிற்சி:

ஆசிரியர் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

### பாட அறிமுகம்:

- சில வினாக்களின் மூலமாக முன்னறிவைச் சோதித்தல்.

**(எ-டு)** **உன் வீட்டில் பூசை அறை இருக்கிறதா?**
**நீ கோவிலுக்குப் போகிறாயா?**

போன்ற வினாக்களைக் கேட்டல்.

- பாடத்தில் வந்துள்ள விளக்கப்படங்களைக் கொண்டு பூசைப் பொருள்களின் பெயர்களைக் குறித்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

  **(எ-டு)** **இது கற்பூரம்.**

  **கற்பூரம் எடு.**

  **இது வெற்றிலை.**

  **வெற்றிலை பச்சை நிறம்.**

## பாட வளர்ச்சி:

- ஆசிரியர் பாடத் தலைப்பைக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி வாசித்து விளக்குதல்.
- மாணவர்களை வாசிக்கச் செய்தல்.
- இவ்வாறே சொற்களையும் சொற்றொடர்களையும் ஆசிரியர் நன்கு உச்சரித்து வாசித்த பிறகு மாணவர்களை வாசிக்கச் செய்தல்.
- பாடத்தில் வந்துள்ள கருத்துக்களை எடுத்துக் கூறுதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *விடுமுறை நாள், பொங்கல் சோறு, கற்பூரம், வெற்றிலை, பாக்கு, கொண்டு வா, வீட்டு வாசல், பூமாலை, பூசைப் பொருள், தொடங்கு, குத்துவிளக்கு, ஏற்று, முடி, திருநீறு, பூசு, கடைசி, அறுசுவை உணவு.*

  இச்சொற்களை வாய்மொழி மூலமாகவும் செய்கை மூலமாகவும் படங்கள் மூலமாகவும் உண்மையான பொருள் மூலமாகவும் விளக்குதல்.

  **(எ-டு)** **வீட்டு வாசல்**

- ***படங்களின் மூலமாக இச்சொல்லை விளக்குதல்.***

**தொடங்கு**

- ***அர்ச்சகர் பூசை தொடங்குகிறார்.***
- ***ஆசிரியர் வகுப்பு தொடங்குகிறார்.***

ஆகிய தொடர் அமைப்புகளின் கற்பித்தல்.

## செயல் முறை:

பூமாலை கட்டு, குத்துவிளக்கு ஏற்று, திருநீறு பூசு ஆகிய சொற்களைச் செய்கை மூலமாக விளக்குதல்.

## இலக்கணம்:

- 'கிறீர்கள்' வினைகளோடு இணைந்து வருவதைச் சொல்லிக் கொடுத்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்:
  - சரியான விடைக்குப் பக்கத்தில் ☑ குறியிடுதல்.
  - வினாக்களுக்கு முழுச்சொற்றொடரில் விடை அளித்தல்.
- சரியான வினையைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தில் எழுதும் பயிற்சி.
- எங்கே/என்ன என்ற வினாப்பெயர்களைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தில் எழுதும் பயிற்சி.
- கோடிட்ட இடங்களில் ‘கிறீர்கள்’ எழுதும் பயிற்சி.
- கட்டங்களில் பொருத்தமான எழுத்தை எழுதும் பயிற்சி.

## வாசித்தல்:

- 'ஊ' ஒலி மீது அழுத்தம் போட்டுச் சொற்களைப் பட்டியலில் அமைத்து மாணவர்களைச் சொல்ல வைத்தல்.
- சொற்களையும் தொடர்களையும் வாசித்தல்.

## தெரிந்துகொள்:

இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி, வாசித்தல் அடங்கி இருக்கின்றன.
- சொற்றொடரில் சொற்களை ஒழுங்காக அமைத்து எழுது.
- எதிர்ச்சொல் எழுது.

# பாடல்: மாசில் வீணையும்

## பாட நோக்கம்:

- மாணவர்களிடம் பக்தி உணர்வை வளரச் செய்தல்.

## வாய்மொழிப் பயிற்சி:

- பாடலில் வரும் சொற்களை நன்கு உச்சரிக்கச் செய்தல்.
  **(எ-டு) மதியமும், வீங்கிள, மூசு, வண்டறை, எந்தை முதலியவை.**
- ஆசிரியர் பாடலைப் பாடச் செய்தல்.

## தொகுதி: ஆறு

## பகுதி: நல்ல செயல்

### பாட நோக்கங்கள்:

- மாணவர்கள் தங்களிடம் வளர்க்க வேண்டிய நல்லொழுக்கங்களைப் பற்றி அறிதல்.
- சிறுவர்கள் நேர்மையாக இருக்க வேண்டும் என்று அறியச் செய்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- எகர, ஏகார ஒலிகளைச் சொற்களில் வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- காய்கறி, பழங்களின் படங்கள்.
- கடை, கடைக்காரன் படங்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

ஆசிரியர் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

### பாட அறிமுகம்:

- வினாக்கள் மூலமாக முன்னறிவைச் சோதித்தல்.

  (எ-டு) **நீ சந்தைக்குப் போகிறாயா?**

  **ஒரு காய்கறி பெயர் சொல்லு.**

  **நீ என்ன குடிக்கிறாய்?**

  போன்ற வினாக்களைக் கேட்டல்.
- பாடத்தில் வந்துள்ள விளக்கப்படங்களைக் கொண்டு முக்கியமான செய்திகளை அறிமுகப்படுத்துதல்.

**(எ-டு)** **காய்கறி வாங்குதல்**

**கிழவருக்குப் பணப்பையைக் கொடுத்தல்.**

**நன்றி கூறுதல்.**

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பைக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி விளக்குதல்.
- சொற்களைத் தனித்தனியாக வாசிக்கச் செய்தல்.
- சொற்றொடர்களை வாசிக்கச் செய்து விளக்குதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *செல், கூடை, பணப்பை, கிழவர், கீழே, விழு, மகிழ்ச்சி, பலகாரம், கடைக்காரன், ரூபாய், சாறு.*

இச்சொற்களைப் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.

**(எ-டு)** **செல்**

- **ஆசிரியர் பள்ளிக்குச் செல்கிறார்.**
- **சிறுமி படிப்பு அறைக்குச் செல்கிறாள்.**

**கீழே விழு**

- **பழம் கீழே விழுகிறது.**
- **பேனா கீழே விழுகிறது.**

**மகிழ்ச்சியாய்**

- **அம்மா மகிழ்ச்சியாய் இருக்கிறாய்.**
- **தேவி மகிழ்ச்சியாய் இருக்கிறாள்.**

இவ்வாறு மற்ற சொற்களையும் தொடர்களில் அமைத்து விளக்குதல்.

## செயல் முறை:

- விழுதல், பார்த்தல், கொடுத்தல், சாப்பிடுதல், குடித்தல் போன்றவை செய்கை மூலமாகக் கற்பித்தல்; மாணவர்களை நடிக்கச் செய்தல்.
- வாசித்தல் திறனைச் சிறு விளையாட்டுக்கள் மூலமாக வளர்த்தல்.
  **(எ-டு)** ஆசிரியர் ஒரு சொல்லைக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி மாணவர்கள் அதைப் பகுதியில் கண்டுபிடித்துக் காட்டுதல்.
- ஆசிரியர் மாணவர்களுக்கு நேரம் பார்க்க கற்பித்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் ஓர் அட்டைக்கடிகாரத்தைச் செய்ய வைத்தல்.

## இலக்கணம்:

- 'கிறார்கள்' வினையோடு இணைந்து வருவதைச் சொல்லிக் கொடுத்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்: வினாக்களுக்கு முழுச்சொற்றொடரில் விடை அளித்தல்.
- கோடிட்ட இடங்களில் 'கு' சேர்த்து எழுது.
- பன்மையில் எழுது.
- கோடிட்ட இடங்களில் 'அவர்கள்' என்ற சொல்லை எழுது.
- சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.
- பெட்டிகளில் சரியான எழுத்துக்களை எழுது.

## வாசித்தல்:

- 'எ', ஏ ஒலிகள் மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.
- 'எ', ஏ ஒலிகள் கொண்ட வேறு சொற்களையும் வாசிக்கச் செய்ய வேண்டும்.
- 'வாசி', 'கவனி', ஆகிய பகுதிகளை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## தெரிந்துகொள்:

இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## கதை:

- ஆசிரியர் படங்களைக் காட்டி ' உத்தரவு கேட்டல்' என்னும் கதையை மாணவர்களுக்குச் சொல்லுதல்.
- நல்ல பண்பு வளர்த்தல் என்று ஆசிரியர் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.
- மாணவர்கள் வகுப்புக்கு முன்னால் நின்று கதையைச் சொல்ல வைக்கலாம்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.
- வாசித்தல்
- பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

# தொகுதி: ஏழு

## பகுதி: கடற்கரை

### பாட நோக்கங்கள்:

- நாட்டைச் சுற்றிலும் உள்ள கடற்கரைகளைப் பற்றி அறிவை வளர்த்தல்.
- கடற்கரை பற்றியும் அங்கே மக்கள் எவ்வாறு பொழுது போக்குவார்கள் என்பதைப் பற்றியும் அறிவை வளர்த்தல்.
- கடற்கரையில் காணும் பொருள்களை அறியச் செய்தல்.
- கடலில் வாழும் உயிரினங்களைப் பற்றி அறிவு வளர்த்தல்.
- கற்றல் அடிப்படைத் திறன்களை வளர்த்தல்.
- ஐகார ஒலியைச் சொற்களில் வருவிதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- கடற்கரை படம்.
- கடற்கரையில் மக்கள் பொழுது போக்கும் படம்.
- சிறுவர்கள் மணல் வீடு கட்டும் படம்.
- கடலில் கப்பல்கள் செல்லும் படம்.
- மீன் படம்.
- மணல், கிளிஞ்சல் முதலிய உண்மையான பொருள்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

## பாட அறிமுகம்:

- மொரீசியசில் ஒரு சில கடற்கரைகளின் பெயர்களைப் பற்றிப் பேசுதல்.
- மாணவர்களுடைய அனுபவத்திற்கேற்ப கடற்கரையை ஒட்டி வரும் செய்திகளைக் கொண்டு உரையாடுதல்.

  **(எ-டு) முதலில் ஆசிரியர் ஓரிரு கடற்கரைகளின் பெயர்களை எடுத்துச் சொல்லுதல்.**

  **பிறகு மாணவர்களுக்குத் தெரிந்த வேறு கடற்கரைகளின் பெயர்களைச் சொல்ல வைத்தல்.**

  - **கடற்கரையில் என்ன இருக்கிறது?**
  - **கடலில் நீ என்ன செய்கிறாய்?**
  - **கடலில் என்ன செல்கிறது?**
- படங்களின் மூலமாகவும் சிறு வினாக்களின் மூலமாகவும் பாடத்தில் வந்துள்ள செய்திகளை அறிமுகம் செய்தல்.

  **(எ-டு) மணல் என்ன நிறம்?**

  **மக்கள் எங்கே உட்காருகிறார்கள்?**

  **மக்கள் கடலில் என்ன செய்கிறார்கள்?**

## பாட வளர்ச்சி:

- பாடத்தலைப்பைப் பிரித்துக் 'கடல்', 'கரை' ஆகிய இரு சொற்களின் பொருளை விளக்குதல்.
- சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து வாசித்தல்.
- புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்குதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *நமது, நாடு, சுற்றிலும், ஞாயிற்றுக்கிழமை, மக்கள் கூட்டம், சவுக்கு மரம், மணல் வீடு, படகு, ஏறு, சுற்று, பொழுது போக்கு.*

  இப்புதிய சொற்களைச் சிறு சொற்றொடரின் மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் படங்களின் மூலமாகவும் விளக்குதல்.

  **(எ-டு)** **சுற்றிலும்**

  - **நாட்டைச் சுற்றிலும் கடல் உள்ளது.**
  - **பள்ளியைச் சுற்றிலும் சுவர் உள்ளது.**
  - **மேசையைச் சுற்றிலும் நாற்காலிகள் உள்ளன.**

  **சவுக்கு மரங்கள்** (படத்தைக் காட்டி)

  - **இது சவுக்கு மரம்**
  - **சவுக்கு மரம் உயரமாய் இருக்கிறது.**
  - **சவுக்கு மரம் நிழல் தருகிறது.**

  **மக்கள் கூட்டம்**

  எங்கெங்கே மக்கள் கூட்டம் இருக்கிறது என்று ஆசிரியர் பட்டியல் கொடுக்கலாம்.

  **(எ-டு)** **கோவிலில் மக்கள் கூட்டம் இருக்கிறது.**

## செயல் முறை:

- மாணவர்கள் விளையாடுதல், ஏறுதல், உண்ணுதல் போன்றவற்றைச் செய்கை மூலமாகக் கற்பித்தல்.
- ஒவ்வொரு மாணவனையும் மாணவியையும் காகிதத்தால் படகு செய்யச் செய்தல்.

## இலக்கணம்:

- 'கின்றன' வினையோடு இணைந்து வருவதைச் சொல்லிக் கொடுத்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்: இது பலவுள் தேர்தல் வினா வகை பயிற்சியும், முழுச்சொற்றொடரில் வினா-விடை எழுதும் பயிற்சியும்.
- ஆசிரியர் இன்னும் சில வினாக்களைத் தயாரித்துக் கொடுக்கலாம்.
- பன்மையில் எழுதும் பயிற்சி.
- பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களில் எழுதும் பயிற்சி.
- பெண்பாலில் எழுதும் பயிற்சி. 'ஒரே சொற்றொடரில் பெயரும் வினையும் பெண்பாலில் எழுதும் பயிற்சி'.
- பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதும் பயிற்சி.
- இது பெயரடை, வினையடை பயிற்சி.
  (வேறு எடுத்துக்காட்டுகளை வைத்துப் பயிற்சி அளிக்கலாம்).

## வாசித்தல்:

- 'ஐ' ஒலி மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.
- 'ட', 'ட்ட' ஒலிகளின் மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.

## தெரிந்துகொள்:

இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்
- வாசித்தல்
- இது சொற்களை நிரப்பும் பயிற்சி. இப் பயிற்சி 'கடற்கரை' என்னும் பாடத்தை ஒட்டி வருகிறது.
- பலவுள் தேர்தல் பயிற்சி. இது மாணவர்களுடைய இலக்கணத்தைச் சோதிக்கும் பயிற்சி ஆகும்.

## பாடல்: 'கடற்கரை'

## பாட நோக்கம்:

- கடற்கரை பற்றியும் அங்கே மக்கள் எவ்வாறு பொழுது போக்குவார்கள் என்பதைப் பற்றியும் அறிவை வளர்த்தல்.

## வாய்மொழிப் பயிற்சி:

- முதலில் பாடலில் வரும் விளக்கப்படத்தை வைத்து உரையாடல் நடத்துதல்.
- பாடலில் வரும் சொற்களை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

## செயல் முறை:

- பாடலைச் செய்கையுடன் பாடுதல்.

**குறிப்பு: ஆசிரியர் பாடலைப் பாடச் செய்தல்.**

## தொகுதி: எட்டு

## பகுதி: ஔவையார்

### பாட நோக்ககங்கள்:

- ஔவையார் என்ற பெரியாரைப் பற்றி அறிதல்.
- ஔவையார் சிறுவர்களிடம் வைத்த அன்பைப் பற்றி உணர்த்தல்.
- ஔவையார் பாடல்களில் உள்ள அடிப்படையான அறிவுரைகளை அறியச் செய்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- ஒகர ஒலியைச் சொற்களில் வருவிதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- ஔவையார் படம்.
- தமிழ் நாட்டுப் படம்.
- ஔவையார் சிறுவர்களிடம் பேசும் படம்.
- ஔவையார் இயற்றிய ஓரிரு நீதி நூல்கள் உண்மையான பொருளாகக் காட்டுதல்.
- சில பெரியார்களின் படங்கள்.

### வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

### பாட அறிமுகம்:

- நூலில் உள்ள படத்தையும் வேறு படங்களையும் கொண்டு அறிமுகப்படுத்துதல்.

- ஔவையார் என்பவரைப் பற்றிப் பொதுவாகப் பேசுதல்.
- ஔவையார் வாழ்ந்த நாட்டைப் பற்றியும் பாடிய பாடல்களைப் பற்றியும் பேசுதல்.

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பைக் கரும்பலகையில் எழுதி விளக்குதல்.
- சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து வாசித்தல்; சொற்றொடர்களாக வாசித்தல்.
- பாடத்தில் வந்துள்ள புதிய சொற்களை விளக்குதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *ஔவையார், பெண், புலவர், பிறந்தார், ஆண்டு, முன், அழை, அன்பு காட்டு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, எளிமை, அறிவுரை, வேண்டும், உண்மை, உதவி செய், தம், கூறு.*
- பாடத்தில் வரும் புதிய சொற்களை சொற்றொடர்களின் மூலமாகவும் படங்களின் மூலமாகவும் விளக்குதல்.

  **(எ-டு)** **எளிமையானவை**

  - **பயிற்சிகள் எளிமையானவை.**
  - **கதைகள் எளிமையானவை.**
  - **வேலைகள் எளிமையானவை.**

  **புலவர்**

  சில புலவர்களின் படங்களைத் தனித்தனியாகக் காட்டி பெயர்களைச் சொல்லுதல்.

**(எ-டு)**

- **இவர் பெயர் பாரதியார்.**
- **இவர் ஒரு புலவர்.**

## பயிற்சி:

- கருத்துணர்தல்: வினாக்களுக்கு முழுச்சொற்றொடரில் விடை அளித்தல்.
- கோடிட்ட இடங்களில் ‘வேண்டும்’ அல்லது ‘வேண்டாம்’ எழுது.
- சொற்றொடர்கள் வரிசையாக எழுது.

  (இது மாணவர்களுக்குப் புதுமையாக உள்ளது.)
- பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களில் எழுது.
- படத்தைப் பார்த்துச் சிறு சொற்றொடர்கள் எழுதும் பயிற்சி.
- பெட்டிகளில் சில பறவைகளின் பெயர்கள் உள்ளன. அவற்றை வட்டம் இடு. பிறகு கோடிட்ட இடத்தில் எழுது.
- 'என் அம்மா' இத்தலைப்பைக் கொண்டு ஐந்து சொற்றொடர்கள் அமைத்து எழுது.

## வாசித்தல்:

- 'ஒ' ஒலி மீது அழுத்தம் போட்டு சொற்களை வாசிக்கச் செய்தல்.
- சொற்களையும் தொடர்களையும் வாசித்தல்.

## தெரிந்துகொள்:

- இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி, வாசித்தல் அடங்கி இருக்கின்றன.
- சேர்த்து எழுதும் பயிற்சி.
- மாணவர்களுக்கு வேற்றுமை சேர்த்து எழுத தெரியும் அல்லது தெரியாது என்ற நோக்கத்துடன் இப்பயிற்சி மூலம் சோதிக்கப்பட்டது.
- வேற்றுமை, வினாப்பெயர்கள் போன்றவற்றைப் பற்றி மாணவர்கள் நன்கு புரிந்துள்ளார்களா என்று சோதிப்பதற்காக இப்பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

## கதை:

- ஆசிரியர் படங்களைக் காட்டி ' உதவி செய்தல் ' என்னும் கதையை மாணவர்களுக்குச் சொல்லுதல்.
- நல்லொழுக்கம் வளர்த்தல் என்று ஆசிரியர் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.
- மாணவர்கள் வகுப்புக்கு முன்னால் நின்று கதையைச் சொல்ல வைக்கலாம்.

## தொகுதி: ஒன்பது

## பகுதி: விளையாட்டு

### பாட நோக்கங்கள்:

- பள்ளியில் மாணவர்களுக்கான சில விளையாட்டுக்களைப் பற்றி அறிதல்.
- விளையாட்டு மூலமாக மாணவர்களுக்குள் நட்பு வளர்த்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- ஓகார ஒலியைச் சொற்களில் வரும்விதம் கற்பித்தல்.

### துணைக்கருவிகள்:

- பள்ளித்திடலில் மாணவர்கள் விளையாடும் படம்.
- சிறுமிகள் கயிறு தாண்டும் படம்.
- சிறுவர்கள் ஓடும் படம்.
- சிறுமிகள் பூப்பந்து விளையாடும் படம்.
- பந்து, பூப்பந்து, கயிறு முதலிய உண்மையான பொருள்கள்.
- விளையாட்டுக்களின் பெயர் பட்டியல்.

### வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

### பாட அறிமுகம்:

- சிறு வினாக்களைக் கேட்டு முன்னறிவைச் சோதித்தல்.

**(எ-டு)** **உன் பள்ளியில் திடல் இருக்கிறதா?**

**திடல் எங்கே இருக்கிறது?**

**திடலில் என்ன செய்கிறாய்?**

- படங்களின் மூலமாக ஒரு சில விளையாட்டுக்களின் பெயர்களை அறிமுகப்படுத்துதல்.

  **(எ-டு) மாணவர்கள் கண்ணாமூச்சி விளையாடுகிறார்கள்.**

  **சிறுமிகள் கயிறு தாண்டுகிறார்கள்.**

  **இவர்கள் பூப்பந்து விளையாடுகிறார்கள்.**

  **சிறுவர்கள் நொண்டி அடிக்கிறார்கள்.**

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பைக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி விளக்குதல்.
- சொற்களையும் தொடர்களையும் ஆசிரியர் நன்கு உச்சரித்த பிறகு மாணவர்களை உச்சரிக்க செய்தல்.
- பாடத்தில் வந்துள்ள புதிய கருத்துக்களை எடுத்துக் கூறுதல்.
- படங்களின் மூலமாகவும் உண்மையான பொருள்களின் மூலமாகவும் செய்கை மூலமாகவும் புதிய சொற்களை விளக்குதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *வெயில், காய், பூப்பந்து, வேறு, சிலர், நண்பர்கள், ஓடிப் பிடி, கயிறு தாண்டு, கண்ணாமூச்சி, நொண்டி அடி, மற்றவர்கள், முக்கியம்.* இச்சொற்களைச் சிறு சிறு சொற்றொடர்களில் அமைத்து விளக்குதல்.

## செயல் முறை:

- ஆசிரியர் மாணவர்களைத் திடலுக்கு அழைத்துப் போய் கால்பந்து, கயிறு தாண்டுதல், கண்ணாமூச்சி போன்ற விளையாட்டுக்களை விளையாட வைத்தல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்:வினாக்களுக்கு முழுச்சொற்றொடரில் விடை அளித்தல்.
- தொடர்களைச் சரியான வினைச்சொல்லோடு எழுதும் பயிற்சி.
- படத்தைப் பார்த்துக் கோடுகளை நிரப்பும் பயிற்சி.
- ஒருமையில் எழுதும் பயிற்சி.
- சொற்றொடர் எழுதும் பயிற்சி.
- தொடரைப் பார்த்துப் பொருத்தமான எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்து எழுது.
- சொற்களை உருவாக்கி எழுது. (ஆசிரியர் இதைப் போன்ற பயிற்சியைத் தயாரித்துக் கொடுக்கலாம்.)
- 'என் நாய்' இத்தலைப்பைக் கொண்டு ஐந்து சொற்றொடர்கள் அமைத்து எழுது.

## வாசித்தல்:

- 'ஓ' ஒலி மீது அழுத்தம் போட்டு சொற்களை வாசிக்கச் செய்தல்.
- சொற்களையும் தொடர்களையும் வாசித்தல்.

## தெரிந்துகொள்:

- இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி, வாசித்தல் அடங்கி இருக்கின்றன.
- ஒவ்வொரு படத்துக்குப் பக்கத்தில் பொருத்தமான சொற்றொடரை எழுதும் பயிற்சி.
- கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதும் பயிற்சி.

## பாடல்: ‘விளையாட்டு’

### பாட நோக்கங்கள்:

- விளையாட்டுக்களின் மூலமாக நட்பு வளர்க்கவும் ஒற்றுமையாக வாழவும் அறியச் செய்தல்.
- பாடலில் ‘டகர’ ஒலி அடிக்கடி வருவதைச் சுட்டிக் காட்டுதல்.

### வாய்மொழிப் பயிற்சி:

- பாடலில் வரும் சொற்களை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

  **(எ-டு) பந்து, விளையாடு, உதைக்கலாம், அடிக்கலாம் முதலியவை.**

- டகர ஒலி கொண்டுள்ள சொற்களின் மீது கவனம் செலுத்துதல்.

  **(எ-டு) ஓடிப் பிடி**
  **தட்டித் தேடலாம்**
  **தாண்டி**
  **நொண்டிப் பிடி**

- ஆசிரியர் பாடலைப் பாடச் செய்தல்.

### செயல் முறை:

- ஓடிப் பிடித்தல், கண்ணாமூச்சி ஆடுதல், கயிறு தாண்டுதல், ஒரு காலைப் பிடித்துக் காலால் நொண்டிப் பிடித்தல் போன்ற செயல்கள் நடவடிக்கைகளாக நடத்துதல்.

# தொகுதி: பத்து

# பகுதி: அழகனும் தாத்தாவும்

## பாட நோக்கங்கள்:

- சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உள்ள அன்பை எடுத்துக் காட்டுதல்.
- சிறுவர்களிடம் அன்பு என்ற நல்ல குணத்தை வளர்த்தல்.
- முதியோர்க்கு எப்போது உதவியாய் இருத்தல் வேண்டும் என்று அறியச் செய்தல்.
- கற்றல் அடிப்படை திறன்களை வளர்த்தல்.
- மாணவர்களுக்குள் உரையாடும் பழக்கத்தை வளர்த்தல்.

## துணைக்கருவிகள்:

- மருத்துவமனை படம்.
- மருத்துவர் தாத்தாவைச் சோதிக்கும் படம்.
- தாத்தா மருத்துவமனையில் கட்டில் மேல் தூங்கும் படம். பக்கத்தில் சிறுவன் உட்காருகிறான்.
- தாத்தா சிறுவனைப் பள்ளிக்கு அழைத்துக் கொண்டு போகும் படம்.

## வாய்மொழிப் பயிற்சி:

பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் வினாக்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல் வேண்டும்.

## பாட அறிமுகம்:

- ஆசிரியர் விளக்கப் படங்களைக் காட்டி வினாக்களின் மூலமாகப் பாடத்தை அறிமுகப்படுத்துதல்.
- மருத்துவரைக் காட்டி "இவர் யார்?" போன்ற சிறு வினாக்களைக் கேட்டல்.

## பாட வளர்ச்சி:

- பாடத் தலைப்பைக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதி விளக்குதல்.
- 'உம்' இடைச்சொல்லைச் சொற்களோடு இணைப்பதைக் கற்பித்தல்.
- சொற்களையும் தொடர்களையும் ஆசிரியர் நன்கு உச்சரித்த பிறகு மாணவர்களை உச்சரிக்கச் செய்தல்.
- பாடத்தில் வந்துள்ள புதிய சொற்களைக் கூறுதல்.
- படங்களின் மூலமாகவும் உண்மையான பொருள்களின் மூலமாகவும் செய்கை மூலமாகவும் புதிய சொற்களை விளக்குதல்.

## புதிய சொற்களை விளக்குதல்:

- *கொஞ்சம், சோதி, மருந்து, கேள், வருத்தம், அழைத்துச் செல், அன்பு காட்டு, நேசி, இந்தாங்க, சீக்கிரம்.*

  இப்புதிய சொற்களைச் சிறு சிறு சொற்றொடர்களில் அமைத்து விளக்குதல்.

**சோதி**

- ஆசிரியர் படங்களைக் காட்டி 'சோதி' என்ற சொல்லை விளக்கலாம். சோதி என்ற வினைச்சொலுக்கு முன் 'ஐ' வேற்றுமை வரவேண்டும் என்று சுட்டிக்காட்டுதல்.

**அழைத்துச் செல்**

- ஆசிரியர் ஒரு மாணவனை வெளியே அழைத்துச் செல்லும் போதே 'நான் இவனை வெளியே அழைத்துச் செல்கிறேன்.' என்று சொல்லுதல்.

**இந்தாங்க**

- ஆசிரியர் செய்கை மூலம் ஒரு மாணவனிடம் ஒரு நூல் கொடுத்து 'இந்தாங்க............' என்று சொல்லுதல்.

## பயிற்சி:

- கருத்துணர்தல்:வினாக்களுக்கு முழுச்சொற்றொடரில் விடை அளித்தல்.
- பெட்டியில் 'சரி' அல்லது 'தவறு' எழுதும் பயிற்சி.
  (பகுதியை படித்த பிறகு தான் இப்பயிற்சி செய்ய வேண்டும்.)
- கோடுள்ள இடங்களில் 'அழைத்துச் செல்வார்' என்ற தொடரை எழுதும் பயிற்சி.
  (வேறு வினைச்சொற்களையும் கொண்டு இம்மாதிரியான பயிற்சிகளை அளிக்கலாம்.)
  **(எ-டு)** **கொண்டு போ**
  **பார்க்கப் போ**
- சொற்களை நிரப்பும் பயிற்சி.
- பன்மையில் எழுதும் பயிற்சி.
- படத்தைப் பார்த்துக் கோடுகளை நிரப்பும் பயிற்சி.
- சொற்றொடர்கள் வரிசையாக எழுது.

- 'என் வீடு' இத்தலைப்பைக் கொண்டு ஐந்து சொற்றொடர்கள் அமைத்து எழுது.

## வாசித்தல்:

- 'ழை' என்ற எழுத்தை மீது அழுத்தம் போட்டுச் சொற்களை வாசிக்கச் செய்தல்.
- சொற்களையும் தொடர்களையும் வாசித்தல்.

## தெரிந்துகொள்:

- இப்பகுதியில் வருவனவற்றை விளக்கி வாசிக்கச் செய்தல்.

## மதிப்பீடு:

- வாய்மொழிப் பயிற்சி, வாசித்தல் அடங்கி இருக்கின்றன.
- அடிகோடிட்ட சொற்களைத் திருத்தி எழுதுதல்.
- ஒழுங்காக எழுதும் பயிற்சி.

## கதை:

- ஆசிரியர் படங்களைக் காட்டி 'அன்பு' என்னும் கதையை மாணவர்களுக்குச் சொல்லுதல்.
- அன்பு வளர்த்தல் என்று ஆசிரியர் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.
- மாணவர்கள் வகுப்புக்கு முன்னால் நின்று கதையைச் சொல்ல வைக்கலாம்.